**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09032025-8602

Volume: 9

Issue: 3

Month: January

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 12.10.2024

Accepted: 19.12.2024

Published: 01.01.2025

Citation:
Sundararaj, T. "Singapore's Bilingual Policy and Tamil Education: An Introduction." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 3, 2025, pp. 61–65

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i3.8602

*Corresponding Author:
sundarasu@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Singapore's Bilingual Policy and Tamil Education: An Introduction

**T. Sundararaj**
*Lecturer, Department of Asian Languages and Cultures*
*National Institute of Education, Nanyang Technological University*
*Singapore*

**Abstract**
*This article explores Singapore's bilingual policy and its impact on the promotion of Tamil education within the country's multi-ethnic society. It examines the significance of language policy in Singapore's development and its social, economic, and educational consequences. Following the People's Action Party's rise to power in 1959, the bilingual policy—emphasizing English alongside mother tongues—was strongly advocated. Former Prime Minister Lee Kuan Yew recognized the necessity of English for economic growth, international trade, and scientific advancement while also acknowledging the importance of preserving multicultural identity through mother tongues. As a result, Tamil, Malay, and Chinese were incorporated into the bilingual policy. This policy played a crucial role in strengthening Tamil language education by promoting English-Tamil bilingualism among Tamils in Singapore. This article provides a concise overview of this policy and its role in enhancing Tamil education.*

***Keywords:*** *Bilingual Policy, Tamil Education, Multicultural Identity, Tamil, Malay, Chinese*

**References**

1. Ang Wai Hoong, 2008. "Singapore's Textbook Experience 1965–97: Meeting the Needs of Curriculum Change," in Toward a Better Future: Education and Training for Economic Development in Singapore since 1965, ed. Lee Sing Kong, (Singapore: National Institute of Education).
2. Judith Holmberg, "New Subject only in 3 Languages," New Nation, 13 October 1973, 2.
3. Koh Eng Chuan (Chief Statistician). 2022. Population Trends, Department of Statistics, Ministry of Trade & Industry, Republic of Singapore.
4. Lee Kuan Yew, 2011. My Lifelong Challenge: Singapore's Bilingual Journey, Straits Times Press.
5. Ramiah Kalimuthu, 1990. Research Undertaken in the Learning and Teaching of Tamil Language in Singapore.
6. Wong Wee Kim (Chief Statistician). 2011. Census of Population 2010 Advance Census Release, Department of Statistics, Ministry of Trade & Industry, Republic of Singapore.

# சிங்கப்பூரின் இருமொழிக்கொள்கையும் தமிழ்க்கல்வியும்: ஓர் அறிமுகம்

*த. சுந்தரராஜ்*
விரிவுரையாளர், ஆசியமொழிகள் பண்பாடுகள்துறை
தேசியகல்விக்கழகம், நன்யாங்தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்

***ஆய்வுச்சுருக்கம்***

*சிங்கப்பூரின் இருமொழிக்கொள்கையும் தமிழ்க்கல்வியும் தொடர்பான இந்தக் கட்டுரை, சிங்கப்பூரில் உள்ள பல்லின சமூகத்தில் உருவான இருமொழிக்கொள்கை தமிழ்க் கல்வியை எவ்வாறு ஊக்கப்படுத்தியது என்பதைப் பற்றி விவரிக்கிறது. சிங்கப்பூரின் வளர்ச்சியில் மொழிக் கொள்கையின் முக்கியத்துவம் மற்றும் அதன் சமூக, பொருளாதார, கல்வி விளைவுகளை இந்த ஆய்வு விளக்குகிறது. 1959-இல் மக்கள் செயல்கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு, இருமொழிக்கொள்கை (ஆங்கிலம் மற்றும் தாய்மொழிகள்) முதன்மையாக வலியுறுத்தப்பட்டது. முன்னாள் பிரதமர் லீ குவான் யூ, பொருளாதார வளர்ச்சி நோக்கில் பன்னாட்டு வணிகம் மற்றும் அறிவியல் வளர்ச்சிக்கு ஆங்கிலத்தின் அவசியம் என்பதை உணர்ந்து ஆங்கிலத்தையும், பல்லினப் பண்பாட்டைக் காக்க தாய்மொழிகள் அவசியம் என்பதை உணர்ந்து தமிழ், மலாய், சீனம் ஆகிய தாய்மொழிகளையும் இணைத்து இருமொழிக் கொள்கையை உருவாக்கினார். அக்கொள்கையின் வழி தமிழர்களிடையே ஆங்கிலம்-தமிழ் என்னும் இருமொழிக்கொள்கை தமிழ் மொழிக்கல்வியை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தது மிகச்சுருக்கமாக விவரிக்கிறது இக்கட்டுரை.*

மலேசியாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் இடையில் மலேசியாவின் தெற்கு முனையில் அமைந்துள்ள சிறிய தீவு சிங்கப்பூர். 2022 ஜூன் மாதம் எடுத்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி, சிங்கப்பூரின் மொத்த மக்கள் தொகை 56.4 லட்சம் (5.64 மில்லியன்) ஆகும். பல்லினச்சமூகமான சிங்கப்பூரில் மூன்று இனத்தவர்கள் அதிகமாக வாழ்கின்றனர். 74.1 சதவீதம் சீனர்கள், 13.6 சதவீதம் மலாய்க்காரர்கள், 9.0 சதவீதம் இந்தியர்கள், 3.3 சதவீதம் பிற இனத்தவர்கள் என சிங்கப்பூர் பல்லினப் பூங்காவாகத் திகழ்கிறது. இந்தியர்கள் என்னும் வகைக்குள் தமிழர்கள் பெரும்பான்மையாகவும் (54.2), மலையாளி (7.6), இந்தி (3.8), சீக்கியர் (3.7), பஞ்சாபி (1.6), இந்துஸ்தானி (1.4), உருது (1.4), குஜராத்தி (1.2), சிந்தி (1.1), சிங்களவர்கள் (0.9), மற்ற இந்தியர்கள் (23.2) என பிற இந்தியர்கள் சிறுபான்மையாகவும் இருக்கின்றனர்.

இன்று சிங்கப்பூர் அடைந்திருக்கும் வளர்ச்சியில் அதன் மொழிக்கொள்கைக்கு முக்கியப் பங்கிருக்கிறது. பல்வேறு இனங்கள் வாழும் ஒரு நாட்டிற்கு மொழிக்கொள்கையை உருவாக்குவதில் தொலைநோக்குப் பார்வை அவசியம். கல்வி, பொருளாதாரம், உள் கட்டமைப்பு, சமூக இணக்கம் முதலிய முதன்மையான சமூகக்கூறுகளில் சிங்கப்பூர் அபாரமான சாதனை படைத்திருக்கிறது. இந்த சாதனைகளுக்கு வித்தாக விளங்குபவை அறுபது ஆண்டுகளுக்கு முன்பு தீர்க்கதரிசனமாக உருவாக்கப்பட்ட மொழிக் கொள்கைகள்.

1959-இல் மக்கள் செயல் கட்சி (கஅக) ஆட்சி அதிகாரத்திற்கு வந்த போது இருமொழிக் கொள்கையை முதன்மையாக வலியுறுத்தியது.1959 ஆம் ஆண்டு டிசம்பர்

8 ஆம் தேதி, அப்போதைய பிரதமர் லீ குவான் யூ தனது முதல் உரையில் இருமொழிக் கல்வியின் முக்கியத்துவத்தை முதன்மைப்படுத்திப் பேசினார்.

சிங்கப்பூரின் பல்லின சமூகச்சூழலை வளர்த்தெடுப்பதற்கு ஆங்கிலத்தையும், தாய்மொழிகளையும் முன்னிலைப்படுத்துவதற்கான அடிப்படை நோக்கங்கள் இருந்தன. ஆங்கிலத்தை முன்னிலைப்படுத்துவதற்கான அடிப்படை நோக்கம், காலனியாதிக்க காலகட்டத்திற்குப் பின்னான அதன் அசுர வளர்ச்சி, குறிப்பாக பன்னாட்டு வணிகம், அறிவியல், தொழில்நுட்பம், அரசியல் கொள்கை என ஒரு நாட்டின் முன்னேற்றக் கூறுகள் ஆங்கிலத்தின் தாக்கத்திற்கு உள்ளாகியிருக்கும் காலக்கட்டம் நம்முடைய காலம் என்பதை நன்குணர்ந்த தலைவர் சிங்கப்பூரின் பிரதமராக இருந்தார். அதனால் அவருடைய மக்கள் செயல் கட்சி சிங்கப்பூரின் ஆட்சிக்கு வந்தவுடன் நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டுசெல்ல ஆங்கிலத்தின் தேவையை உணர்ந்து, ஆங்கிலத்தை அலுவல் மொழியாகத் தேர்ந்தெடுத்தது. சிங்கப்பூர் சூழலில் வணிகம், அறிவியல், தொழில்நுட்பம் முதலிய நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் மட்டுமன்றி, பல்லின சமூகங்களுக்குள் இணக்கமான உறவை தொடர்பு மொழி அல்லது அலுவல் மொழி என்னும் வழியில் உருவாக்கும் என்ற நோக்கிலும் ஆங்கிலம் முன்னிலைப்படுத்தப்பட்டது. அந்த நோக்கங்கள் நிறைவேறி சிங்கப்பூர் பொருளாதார வளர்ச்சியிலும், சமூக நல்லிணக்கத்திலும் மாபெரும் சாதனை படைத்திருப்பதை இன்று காணலாம்.

பிரதமர் லீ குவான் யூ-வின் மற்றொரு முதன்மையான நோக்கம், சிங்கப்பூரில் வாழும் சமூகங்கள், குறிப்பாக மூன்று பெருஞ்சமூகங்களான சீனர்கள், மலாய்காரர்கள், தமிழர்கள் தங்கள் இன அடையாளங்களை மீட்டுருவாக்கம் செய்து, பண்பாட்டு விழுமியங்களை போற்றிப் பின்பற்றுவதற்கு அவர்களது தாய்மொழி முக்கியமானது. அதோடு, பல்வேறு பின்புலங்களைக் கொண்ட வெவ்வேறு இன அடையாளங்களுடன் ஒரு நாட்டில் ஒரே (சிங்கப்பூர்) சமூகமாகக் கூடிவாழும் போது, தனிமனிதர்களின் மதிப்பும், பண்பாட்டு உணர்வும் வலுப்பட தாய்மொழி உதவும் என்பதை உணர்ந்து தாய்மொழிகளையும் ஆங்கிலத்திற்கு இணையாக ஊக்குவித்தார் பிரதமர் லீ. தாய்மொழிகளை ஊக்குவிப்பதன் வழி சிங்கப்பூரின் பல்லின சமூக அடையாளத்தைப் பேணிக் காக்க முடியும் என்கிற உயரிய நோக்கமும் அதில் இருந்தது. அந்த நோக்கம் தான் தாய்மொழிகளைக் கல்விக்கூடத்திற்கு அழைத்து வந்தது.

தொடக்கத்தில், பள்ளிகளில் இரண்டாம் மொழியைக் கற்றுக்கொள்வது விருப்பப்பாடமாகவே ஊக்குவிக்கப்பட்டது. 1960-இல், சிங்கப்பூர் அரசு அனைத்து தொடக்கப் பள்ளிகளுக்கும் இரண்டாம் மொழிப் படிப்பைக் கட்டாயமாக்கியது. அதனைத் தொடர்ந்து தேர்ந்தெடுத்தப் பாடங்களை தாய்மொழியில் கற்பிப்பதன் வழியாக தாய்மொழியின் மீது மாணவர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

சிங்கப்பூர் 1965 இல் சுதந்திரம் பெற்ற போது, சிங்கப்பூர் அரசியலமைப்பின் 153 அ பிரிவின் கீழ் ஆங்கிலம், மலாய், மாண்டரின் மற்றும் தமிழ் ஆகியவை நாட்டின் நான்கு அதிகாரப்பூர்வ மொழிகளாக அறிவிக்கப்பட்டன. மலாய், மாண்டரின் மற்றும் தமிழ் ஆகியவை முறையே மலாய், சீன மற்றும் இந்திய சமூகங்களின் தாய் மொழிகளாக அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து, அரசு 1966-இல் மேல்நிலைப் பள்ளிகளிலும் தாய்மொழிகளை இரண்டாம் மொழிகளாக கற்பிக்கும் முறையை கட்டாயமாக்கியது. 1969 ஆம் ஆண்டு தாய்மொழிப் பாடங்களை கட்டாயத்

தேர்வுப்பாடங்களாக (GCEO & level) மாற்றியது. இது தாய்மொழிக் கல்வியை உறுதி செய்தது. 1974-இல் தொடக்கப் பள்ளிக்காக உருவாக்கப்பட்ட புதிய பாடமான “வாழ்வதற்கான கல்வி’ தாய்மொழியில் கற்பிக்கப்படும் என்று அரசு அறிவித்தது.

1834-இலிருந்து 1982 வரை சிங்கப்பூரில் தமிழ்ப்பாடங்கள், தமிழ்ப்பள்ளிகள் என தனித்தனி வடிவங்களில் தோன்றுவதும் மறைவதுமாக இருந்தன. 1940-60 ஆகிய இடைப்பட்ட காலத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ்ப்பள்ளிகள் இருந்தன. அவையனைத்தும் தொடக்கப்பள்ளிகளாக இருந்தன. 1960-இல் உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. 1968-ஆம் ஆண்டில் தமிழ் படித்த மாணவர்களின் எண்ணிக்கையே தமிழிப் பள்ளிகளில் தமிழ்ப்படித்த மாணவர்களின் அதிகபட்ச எண்ணிக்கையாகக் கொள்ளப்படுகிறது. அதாவது தொடக்க நிலையில் 1490 மாணவர்களும், உயர்நிலையில் 353 மாணவர்களும் என மொத்தம் 1843 மாணவர்கள் தமிழ் படித்தனர். இந்த முயற்சிகள் அனைத்தும் தமிழ் அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்டவை. சில சூழல்களில் அரசும் சில உதவிகளைச் செய்திருக்கிறது. மறுபக்கத்தில் 1960-க்குப் பின் தனித் தமிழ்ப் பள்ளிகளின் எண்ணிக்கை குறைய ஆரப்பித்தது. ஏனென்றால் அரசுப்பள்ளிகள் அதிகரிக்கத் தொடங்கின. அரசுப் பள்ளியில் அரசின் இருமொழிக் கொள்கை அமல்படுத்தப்பட்டு தமிழ் மாணவர்களுக்குத் தமிழ் மொழி இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்பட்டது. அரசின் முழு நிதி உதவி யுடன் இயங்கிய அப்பள்ளிகள் ஆங்கிலப் பள்ளிகள் என்று அழைக்கப்பட்டன. அப்பள்ளிகள் சிங்கப்பூரின் பல்லினச்சமூக மாணவர்கள் அனைவரையும் முதல் மொழியான ஆங்கிலத்தின் மூலம் ஓரிடத்தில் ஒருங்கிணைத்து. அவை தான் இன்றைய அரசுப் பள்ளிகளாக கல்வி அமைச்சால் நிர்வகிக்கப்பட்டு பெருகியிருக்கின்றன. இன்று பாலர்பள்ளி, தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, தொடக்கக்கல்லூரி, பல்கலைக்கழகம் என அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் தமிழுக்கு இடம் இருக்கிறது. அவற்றில் ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் தமிழ்க்கல்வி பயில்கிறார்கள். சிங்கப்பூரில் தமிழ் மொழியையும், தமிழ்க்கல்வியையும் இன்றைய நிலைக்கு உயர்த்தியதில் சிங்கப்பூரின் இருமொழிக் கொள்கைக்கு முக்கியப் பங்கு உண்டு. இன்றைய தலைமுறைக்கு ஏற்ப, பல்வேறு வகையான மென்பொருட்கள், செயலிகள் வழித் தமிழ் மொழிக்கற்பித்தல் தொடர்ச்சியாக ஊக்குவிக்கப்படுகிறது.

21-ஆம் நூற்றாண்டில் உருவாகிக் கொண்டிருக்கும் புதிய சூழல்களுக்கேற்ப தமிழ்மொழியைப் புதுப்பித்து, வாழும் மொழியாக நிலைநிறுத்த வேண்டிய பொறுப்பு இன்று அதிகரித்திருக்கிறது. சிங்கப்பூரின் பன்மொழிச் சூழலில், இருமொழிக் கொள்கையின் வழி தமிழ்மொழிக்கல்வியை எவ்வாறு மேம்படுத்தலாம் என்று சிந்தனை தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆங்கிலம் - தமிழ் என்னும் இருமொழியும் தமிழ் மொழியையும், தமிழ்க் கல்வியையும் மேம்படுத்தும் நோக்கில் அமைய வேண்டும். AI போன்று இன்று புதிதாக வந்து கொண்டிருக்கும் தொழில்நுட்பங்களில் ஆங்கிலத்தின் வழியாகத்தான் நமக்கு வருகின்றன. ஆங்கிலமும் தமிழும் அறிந்த தமிழர்கள் அந்தத் தொழில்நுட்பங்களை தமிழ் மொழியில் எவ்வாறு பயன்படுத்துவது என்று ஆய்வுத்துடிப்புடன் முன்னெடுக்கப்படுகிறது. ஆங்கிலத்தின் வழி அறிமுகமாகக் கூடிய அனைத்துத் தொழிநுட்ப அறிவையும் தமிழுக்குக் கொண்டு வரும்போது தான் ஆங்கிலத்துக்கு நிகராகத் தமிழும் தழைக்க முடியும். ஆங்கிலம்-தமிழ் என்னும் இருமொழிக் கொள்கை கற்றல்-கற்பித்தல் என்ற நிலையோடு சுருங்கிவிடாமல், ஒவ்வொரு காலகட்டத்திலும் செல்வாக்குப்

பெறும் தொழில்நுட்பம் உட்பட அனைத்துத் துறைகளிலும் கட்டாயமாக்கப்படும் போது தான் இருமொழிக் கொள்கையின் அடிப்படைத் தத்துவத்தைக் காப்பாற்ற முடியும். உலகத்தோடு தொடர்புகொள்வதற்கும், அறிவியல், வணிகம் போன்ற துறைகளில் உலக நாடுகளோடு ஒருங்கிணைந்து செயல்பட்டு சிங்கப்பூரை முன்னேற்றுவதற்கு ஆங்கிலம், பல்லினச் சமூகமான சிங்கப்பூரின் பண்பாடுகளையும், அடையாளங்களையும் போற்றிக் காப்பதற்குத் தாய்மொழி என்னும் சிங்கப்பூரின் அடிப்படையான மக்களாட்சித் தத்துவத்தை இந்த இருமொழிக்கொள்கை கண்போல் காப்பாற்றி வருகிறது.

## துணைநூற்பட்டியல்

1. அங் வை ஹூங், 2008. "சிங்கப்பூரின் பாடநூல் அனுபவம் 1965-97: பாடத் திட்ட மாற்றத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்," Toward a Better Future: Education and Training for Economic Development in Singapore since 1965, தொகுப்பாசிரியர் லீ சிங் கோங், (சிங்கப்பூர்: தேசிய கல்விக்கழகம்).
2. ஜூடித் ஹோல்ம்பெர்க், "மூன்று மொழிகளில் மட்டுமே புதிய பாடம்," New Nation, 13 அக்டோபர் 1973, பக் 2.
3. கோ எங் சுவான் (தலைமை புள்ளிவிவர நிபுணர்), 2022. "மக்கள் தொகை போக்குகள்," புள்ளிவிவரத் துறை, வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகம், சிங்கப்பூர் குடியரசு.
4. லீ குவான் யூ, 2011. "என் வாழ்நாள் சவால்: சிங்கப்பூரின் இருமொழிக் பயணம்," ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் ப்ரெஸ்.
5. ராமையா கலிமுத்து, 1990. "சிங்கப்பூரில் தமிழ் மொழி கற்றலும் போதனையும் தொடர்பான ஆய்வு."
6. வொங் வீ கிம் (தலைமை புள்ளிவிவர நிபுணர்), 2011. "2010 மக்கள் தொகை கணக்கெடுப்பு முன்னோடி அறிக்கை," புள்ளிவிவரத் துறை, வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகம், சிங்கப்பூர் குடியரசு.